செய்திக்குறிப்பு**நாள்** 10.07.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்திரு.மு.க.ஸ்டாலின்அவர்களின்**

**ஆணைப்படிஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமிதிருக்கோயில் மற்றும் இதன்**

**உபகோயிலானதிருவெள்ளறை அருள்மிகு புண்டரீகாட்ச பெருமாள் திருக்கோயில் மற்றும்**

**சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களை மாண்புமிகு**

**இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திருபி.கே. சேகர்பாபுஆய்வு**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமிதிருக்கோயில் மற்றும் இதன் உபகோயிலானதிருவெள்ளறை அருள்மிகு புண்டரீகாட்ச பெருமாள் திருக்கோயில் மற்றும் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில்இன்று (10.07.2021) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்அவர்களின் ஆணைப்படி இன்று 10.07.2021 ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமிதிருக்கோயி லில்பக்தர்களுக்கான அடிப்படை சவதிகளைமேம்படுத்திடஅலுவலர்களுக்குஅமைச்சர் அறிவுரைவழங்கினார்.

திருக்கோயிலில் அமைந்துள்ள கோசாலையை நன்கு தூய்மையாக பராமரிக்க வும், அதிகமாக பசுக்கள்காணிக்கையாக வருவதால்திருக்கோயிலுக்கு அருகில் வேறு ஒரு கோசாலையை அமைக்க நடவடிக்கை எடுக்கவு ம்,கோயிலுக்குள் அமைந்துள்ள கோசாலையில் போதுமான பசுக்கள்பராமரிக்கப்படும் எனவும், மிகையாகவரப்பெறுபவை புதிய கோசாலையில்பராமரிக்கப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வசந்த மண்டபத்தில் உள்ள குளத்தினை தூய்மையாக பராமரிக்க வும், தண்ணீர் வரும் பாதைகளில்அடைப்புகள்உள்ளதா என மாநகராட்சி மூலம் ஆய்வு செய் து நடவடிக்கை எடுக்கவும், ஆக்கிரமிப்புகள் இருந்தால் மாநகராட்சி மூலம் அகற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீரங்கம் அடிமனை பிரச்சனை தொடர்பாக 1866ம் ஆண்டு அரசால்திருக்கோயிலுக்கு உரிமை செய்து வழங்கப்பட்ட உரிமை சாசனம் TD 1027ல்330 ஏக்கரில் அமைந்துள்ள வீடுகள் / கடைகள் கட்டியுள்ளவர்கள்திருக்கோயில் உரிமையை ஏற்றுக்கொண்டுவாடகைதாரராகதாமாகவே முன்வந்து திருக்கோயிலுக்கு மனு அளித்தால் சட்டப்படி பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திருக்கோயில்அருங்காட்சியத்தில் உள்ள பழங்கால ஓலைச்சுவடி 1313 எண்ணிக்கையிலான2626 பக்கங்கள் கொண்ட ஆறு தொகுப்புகளை கடந்த மாதத்தில் நவீன

கேமரா மூலம் புகைப்படம் எடுத்து டிஜிட்டலைஸ் செய்யப்பட்டுள்ளது.அதுபோல பழங்கால செப்புத்தகடுகள்44 எண்ணிக்கையிலான88 பக்கங்கள் கொண்டதை டிஜிட்டலைஸ் செய்யும் பணி நடைபெற்று வருகிறது

ஆழ்வார் - ஆச்சார்யார்வைணவ மையத்தில் இளங்கலை / முதுகலை / வைணம் / ஸ்ரீபாஷ்யம் படிப்பில் தற்போது 52 மாணவர்கள் பயின்று வருகின்றனர். தற்போது ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடைபெற்று வருகிறது. 2021ம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள்21.07.2021வரைவரவேற்கப்பட்டுள்ளது.

நிலங்கள், மனைகள், கட்டிடங்கள் (கட்டளை உள்பட) கேட்பு வசூல் நிலுவை பதிவேட்டின்படி சென்ற இரண்டு மாதங்களில் மட்டும் ரூ ,77.92 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலின்உபகோயில்களான1) அன்பில் அருள்மிகு சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில்2) அன்பில் அருள்மிகு சத்யவாகீஸ்வரர்திருக்கோயில் 3) அன்பில் அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர்திருக்கோயில் 4) திருவெள்ளறை அருள்மிகு வடஜம்புநாதர் ஆகிய திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்ய தொல்லியல்துறை ஆய்வறிக்கை கோரப்பட்டுள்ளது. தொல்லியல் துறை வல்லுநர் குழு ஆய்வு செய்து அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். திருக்கோயிலில் உள்ள தேவையற்ற இரும்பு தகர சாமான்கள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## <u>திருவெள்ளறை அருள்மிகு புண்டரீகாட்ச பெருமாள் திருக்கோயில்</u>

திருவெள்ளறை அருள்மிகு புண்டரீகாட்ச பெருமாள் திருக்கோயிலின் முன்பாக ஊர்மக்களால் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள தகர ஷெட்டினைஅகற்றுவதற்குமாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.P.(MD)No. 10184 /2021 வழக்கில்21.06.2021 அன்று இரண்டு வாரத்திற்குள் அகற்றிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே உடனடியாக வருவாய்துறை மற்றும் காவல்துறை மூலம் அகற்றப்படும்.

திருவெள்ளறைஇராஜகோபுரம் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக முடிவடையாத கோபுரமாக உள்ளது. மேற்படி கோபுரம் தொல்லியல்துறையின்ஆலோசனைப்படியும் சென்னை உயர்நீதிமன்ற வல்லுநர் குழுவால்வழங்கப்பட்டபரிந்துரைகளின்படி திருப்பணி செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கோபுரத்தை முழுமையாக கட்டி முடித்திட சட்ட விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## அருள்மிகுமாரியம்மன் திருக்கோயில்சமயபுரம்

சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்த அமைச்சர்திருக்கோயில் வளாகம் , பக்தர்கள் வரிசை வளாகம் கட்டும்பணி , முடிகாணிக்கை மண்டபம் மற்றும் அன்னதான கூடம் ஆகியவற்றை ஆய்வு செய்து அலுவலர்களுக்குஅறிவுரைகள்வழங்கினார்.

திருக்கோயிலின் கிழக்கு நுழைவாயில் ஏழுநிலைஇராஜகோபுரத் திருப்பணி ரூ.3.15கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரு வதைபார்வையிட்ட அமைச்சர் உபயதாரர் மூலம் நீண்ட நாட்களுக்கு பொலிவுடன் இருக்க கூடிய ஜப்பான் பெயிண்ட் பயன்படுத்தி வர்ணம் பூசி, பணிகளை விரைந்து முடித்து குடமுழுக்கு நடைபெற வேண்டும் எனவும் , சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின்உபகோயிலான அருள்மிகு கனகாம்பிகை உடனுறை முக்தீஸ்வரர்திருக்கோயிலில் 10.08.1960 அன்று குடமுழுக்கு நடைபெற்று 60 ஆண்டுகள் கடந்த நிலையில் ரூ. 17.00 இலட்சம் மதிப்பீட்டில்திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படஉள்ளதையும், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின்உபகோயிலான அருள்மிகு உஜ்ஜயினிஓம்காளியம்மன் திருக்கோயிலில் கடந்த 11.05.2008 அன்று குடமுழுக்கு நடைபெற்று , 12 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் , தற்போது ரூ. 58.00 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகளை விரைவில் துவக்கி குடமுழுக்கு நடத்தப்படஉள்ளதையும் விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

முடிகாணிக்கை மண்டபத்தை ஆய்வு செய்த அமைச்சர் நாவிதர்கள், முடிகாணிக்கை செலுத்த வரும் பக்தர்களிடம் கட்டாயப்படுத்தி பணம் வசூல் செய்வதாக அடிக்கடி புகார் வருவதால், டிக்கெட் கட்டணத்தை தவிர கூடுதலாக சேவார்த்திகளிடம் பணம் வசூலிக்கக்கூடாது எனவும் , மீறி வசூலித்தால்நாவிதர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் தற்போது நாள் ஒன்றுக்கு 400 நபர்களுக்குஅன்னதானத் திட்டம் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதிகளவில் பக்தர்கள் பயன் அடையும் விதத்தில் அன்னதான திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என தெரிவித்தார்.

தற்போது ரூ. 13.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் க்யூ காம்ப்ளக்ஸ்பணியைத் துரிதப்படுத்தி, விரைந்து முடித்து பக்தர்களின்பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அறிவுறுத்தினார். சமயபுரம் , அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் மூலவர் சன்னதி தங்க விமானத்தை சாரம் போட்டு துடைத்து பொலிவுடன் வைக்க அறிவுறுத்தினார்.

மேலும், அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசும்போது, தமிழ்நாடு முழுவதும் உள்ள திருக்கோயில்களில் காலியாக உள்ள பணியிடங்களைமுதற்கட்டமாக மிக அத்தியாவசியபணியிடங்களை மட்டும்சட்ட விதிகளின்படிநிரப்பிட பொது விளம்பரம்செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடுமுழுவதும் திருக்கோயில்பணியாளர்களுக்கான ஓய்வு ஊதியம் உயர்வு செய்ய கோரியது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு முழுவதும் திருக்கோயில்களில் தற்போது பணிபுரிந்து வரும் தற்காலிகம் / தொகுப்பூதியபணியாளர்களை சட்டமன்ற 110 விதியின்படி பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபுஅவர்கள்செய்தியாளர்களிடம்தெரிவித்தார்.

இந்தஆய்வுகளின்போது, இந்துசமயஅறநிலையத்துறைகூடுதல்ஆணையர் (நிர்வாகம்) ரி.இரா,கண்ணன் இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளிமாவட்டஆட்சியர்திரு,சு.சிவராசுஇ.ஆ.ப.,ஸ்ரீரங்கம்சட்டமன்றஉறுப்பினர்திரு .எம்.பழனியாண்டி, திருச்சிராப்பள்ளிமண்டலஇணைஆணையர்திரு.அர.சுதர்சன், ஸ்ரீரங்கம்அருள்மிகு அரங்கநாதசுவாமிதிருக்கோயில்இணைஆணையர்/செயல்அலுவலர்திரு.மாரிமுத்து, சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்இணைஆணையர்/செயல்அலுவலர்திருமதிகல்யாணிமற்றும்அலுவலர்கள்கலந்துகொண்டனர்.

வெளியீடு. மக்கள்தொடர்புஅலுவலர், இந்துசமயஅறநிலையத்துறை,
சென்னை.34.